**நொச்சியாகம பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 23 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 செப்தெம்பர் 03 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர 18 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நொச்சியாகம பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் நொச்சியாகம கோழி விற்பனை நிலைய இலக்கம் 01 குத்தகைக்கு விடப்பட்டதில் வருமானமாகக் கிடைத்த ரூபா. 423,333 உடைய மறுக்கப்பட்டிருந்த காசோலை கடன்பட்டோராக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க வில்லை. | மறுக்கப்பட்ட காசோலை கடன் பெற்றோராக கணக்கிடப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். ஏதிர் காலத்தில் நிவர்த்தி செய்வேன். |
| (ii) | மீளாய்வாண்டின் நீதிமன்ற தண்டப் பண வருமானம் ரூபா. 3,752,084 ஆகவும் நிதிக் கூற்றுக்களில் ரூபா. 3,475,748 ஆகவும் காட்டப்பட்டிருந்தமையினால் ரூபா. 276,336 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | வருடத்திற்கான நீதிமன்ற தண்டப் பண வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். | நீதிமன்ற தண்டப் பண வருமான விபரங்கள் உரிய நிறுவனம் மூலம் பெற்றுக் கொள்ள முடியவில்லை. |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (iii) | 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய முத்திரை வருமானம் ரூபா. 802,115 நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். | 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய முத்திரை வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கான ஆதாரங்கள் இல்லை. |
| (iv) | 2018 ஆம் ஆண்டில் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட பொலெரோ வண்டியின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அவ் வண்டி தொடர்பாக ரூபா. 622,822 செலுத்த வேண்டிய குத்தகைக் கட்டண பெறுமதியாகக் காட்டப்பட்டிருந்தது. | பொதுவாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்களில் சொத்துக்கள் மற்றும் அகற்கான பொறுப்புக்கள் காட்டப்படல் வேண்டும். | குத்தகை முடிவடைந்ததும் சொத்தாக அங்கீகரிக்கப்படாது என கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் வெளியீடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (v) | இலங்கை வங்கியில் 6286999 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கிற்கு 14 சந்தர்ப்பங்களில் ரூபா. 822,762 நேரடி வைப்புக்கள் சரியாக இனங்காணப்படாது வேறு வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | வங்கிக்கு நேரடியாகக் கிடைக்கின்ற வைப்பு சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். | நேரடிப் பற்றுச் சீட்டுகள் சபை நிதியத்திற்கு அறவிடப்பட்டன. |

(ஆ) **நிகழத்தக்க பொறுப்பு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் சபைக்கு எதிராக வெளித் தரப்பினர் மூலம் ரூபா. 400,000 கணக்கீடு செய்யக் கூடிய பெறுமதியுள்ள மற்றும் சபை மூலம் ரூபா. 4,582,557 பெறுமதியுடன் கூடிய பணத்தை பெறுவதற்காக 16 வெளித் தரப்பினருக்கு எதிராக பொறுப்புச் சாட்டப்பட்ட வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படவில்லை. | நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

(இ) **இணங்காமைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிலுவையாக இருந்த வாடகை வருமானம் நிதிக்கூற்றுக்களின் | குறித்த நிலுவைகளில் வித்தியாசங்கள் ஒப்பிடப்பட்டு | ஏற்றுக்கொள்கிறேன். சரி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

| | |
|---|---|
| பிரகாரம் ரூபா. 11,675,532 எனவும் அட்டவணையின் பிரகாரம் ரூபா. 10,656,567 எனவும் இருந்தமையால் ரூபா.1,018,965 வித்தியாசம் காணப்பட்டது. | கணக்குகள் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ஈ) **கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) **கிடைக்க வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| ❖ | 06 வருடங்களுக்கு மேலாக காணப்பட்டு வருகின்ற ரூபா. 11,843,472 பெறுமதியான 02 கணக்கு மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | கிடைக்க வேண்டிய நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை |
| ❖ | 06 வருடங்களிலிருந்து 21 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் அறவிடப்படாது காணப்படுகின்ற 19 அரச சொத்துக்கள் மூலம் பெற வேண்டியிருந்த ரூபா. 714,228 பெறுமதியான வீத வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை |

(ii) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 வருடங்களுக்கு மேலாக காணப்பட்டு வருகின்ற ரூபா. 908,422 பெறுமதியான செலுத்தப்படாத ஓய்வூதிய சலுகைகள் மற்றும் பணிக் கொடை மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய நிலுவைகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

(உ) **கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பெறுமதி ரூபா. 9,269,702 ஆகவிருந்த 04 கணக்கு விடயங்களுடன் தொடர்பான ஏற்றுக் கொள்ளக் கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் காட்டப்படும் கணக்கு மீதிகளை உறுதி செய்யும் சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும் | ஏற்றுக் கொள்கின்றேன் |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா. 33,426,347 பெறுமதியான 52 வருமான விடயங்கள் மற்றும் ரூபா. 45,627,853 பெறுமதியான 46 செலவீன விடயங்கள் கணக்கிற்கு மாற்றுவதற்கு குறித்த நாற்குறிப்பு அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் காட்டப்படும் கணக்கு மீதிகளை உறுதி செய்யும் சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும் | பொதுப் பேரேட்டில் வருமானம், செலவீனக் கணக்குகளை சமப்படுத்திய பின்னர் நிலுவை வருமானம் மற்றும் செலவினக் கணக்கிற்கு மாற்றுவதுடன் இதற்காக நாட்குறிப்பு பதிவொன்று செய்யப்படவில்லை. 2021 இற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இது தொடர்பாக அவதானம் செலுத்துவேன். |

1.4 **இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் உப பிரிவு | | வருடாந்த செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை | உரிய சட்டத்திற்கு அமைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 203 ஆம் அதிகாரம். | 12,788,184 | சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் பதிவு செய்யப்படாமல் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. | சபைக்குச் சொந்தமான வாகனங்களைப் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். | வாகனங்களைப் பதிவு செய்வதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் ----------------- | | | | |
| (i) | நிபி 189 | 445,483 | 02 மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை | நிதிப்பிரமாணத்திற்கு அமைய செயற்பட வேண்டும் | பதிலளிக்கப்பட வில்லை. |
| (ii) | நி.பி 1647(உ) | - | சபைக்கு சொந்தமான அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. | நிதிப் பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஈ) | பொது நிர்வாக சுற்றறிக்கை -------------- | | | | |
| | 2016 திசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | சபைக்குச் சொந்தமான 19 வாகனங்களில் எரிபொருள் எரிவு பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |

## 02. நிதி மீளாய்வு

------------------

### 2.1 நிதி விளைவுகள்

----------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,808,419 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,229,079 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

----------------

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,518,970 | 4,564,085 | 5,693,730 | 4,117,848 | 2,568,970 | 2,477,805 | 1,824,083 | 5,247,493 |
| (ii) | வாடகை | 5,752,300 | 8,595,700 | 4,656,725 | 11,675,532 | 6,455,300 | 3,863,580 | 3,518,130 | 7,736,557 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 20,623,900 | 7,053,647 | 3,525,331 | 9,357,077 | 16,995,700 | 6,299,480 | 6,248,120 | 5,828,761 |
| (iv) | வேறு வருமானங்கள் | 12,296,600 | 13,212,915 | 11,787,387 | 4,017,372 | 18,251,000 | 12,030,488 | 12,950,813 | 2,592,204 |
| | | 41,191,770 | 33,426,347 | 25,663,173 | 29,167,829 | 44,270,970 | 24,671,353 | 24,541,146 | 21,405,015 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

-----------------

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் திருத்தப்பட்ட பிரதேச வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இவ் வீதவரி மதிப்பீடு தொடர்பாக கோவையொன்று அல்லது உரிய ஏதாவது மூல ஆவணமொன்று அலுவலகத்தினுள் கண்டுபிடிக்க முடியாமையினால் இது தொடர்பாக சான்றுகள் சமர்ப்பிக்க முடியவில்லை. |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டில் இடம் பெற்ற மதிப்பீட்டின் கீழ் வீதவரி அறவிடப்பட்டிருந்ததுடன் 13 ஆண்டு காலத்திற்குரிய புதிய நிர்மாணங்கள், மாற்றங்கள் போன்றவை தொடர்பாக தற்காலிக மதிப்பீடுகளின் கீழ் அல்லது வீதவரி அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 5 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடுகள் திருத்தம் செய்யப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

2.2.3 **வாடகை**

-----------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபை மூலம் நிர்மாணிக்கப்பட்டு வாடகைக்கு விடப்பட்ட 27 கடைகளின் உரித்துச் சான்றிதழ் இல்லாமையால் கடை வாடகை கொடுப்பனவு தவிரப்புச் செய்யப்பட்டதால் அறவிடப்பட முடியாத வருமானம் ரூபா. 6,222,900 ஆகக் காணப்பட்டது. | நிலுவை வாடகையை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இக் கடைகள் அமைந்துள்ள இடங்களின் உரித்து தொடர்பாக இடம்பெறுகின்ற பிரச்சினை காரணமாக இந் நிலை எழுந்துள்ளது. |

**2.**2.4 **அனுமதிப்பத்திரக் கட்டணம்**

-------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி நிர்வாகம்) 59-66 ஆம் விதிகளின் பிரகாரம் வியாபார இடங்களை இனங் காண்பதற்காக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

2.2.5 **வருமானங்கள்**

-----------------

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2013 தொடக்கம் 2018 வரையான வருடங்களுக்கு உரிய முத்திரைக் கட்டணம் பிரதான செயலாளரினால் விசாரிக்கப்பட்டு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் முத்திரை வரி தொடர்பான ஆவணம் முறையாக தயாரிக்கப்படவில்லை. | நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிரதான செயலாளரினால் இம் முத்திரைக் கட்டண அளவு விசாரிக்கப்பட்டு தீர்ப்பதற்கு மற்றும் சரியான முறையில் ஆவணம் பேணப்படுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) | இகலவெடியாவ, குகுல்கடுவ, ஹொருவில, நொசிசயாகம ஆகிய | நிலுவை நீர் கட்டண வருமானம் அறவிட | ஜனவரி மாத நிலுவை நீர்க் கட்டணம் தொடர்பாக சிவப்பு அறிவித்தல் |

| | | |
|---|---|---|
| பிரதேசங்களில் நடாத்தப்படுகின்ற நீர்த் திட்டம் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் இருந்த நிலுவைத் தொகை ரூபா. 4,017,372 ஆக இருந்ததுடன் அதன் சாதாரண வருடாந்த பட்டியலிடப்பட்ட பெறுமதி ரூபா. 15,886,987 ஆக 25 வீதமாகக் காணப்பட்டது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அனுப்பப்பட்டதுடன் நடைமுறை நிலுவைக் கட்டணம் சேகரிக்கும் வேலைத்திட்டமொன்று செயற்படுத்துவதால் அறவிட நடவடிக்கை எடுப்பேன். |

03. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **செயலாற்றல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**உப விதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். எனினும் 2019 திசெம்பர் 31 இல் குறித்த விடயம் தொடர்பாக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்பட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வருமான சேகரிப்பு, வியாபார அனுமதிப்பத்திரம் அறிவித்தல் பலகை போன்ற விடயங்கள் தொடர்பாக பல நிறைவேற்றப்பட்ட உப விதிகள் மாத்திரம் தழுவப்பட்டிருந்ததுடன் ஏனைய விடயங்கள் தொடர்பாக உப விதிகள் தழுவப்பட்டு அல்லது புதிய உப விதிகள் தயாரிக்கப்பட்டு விதிக்கப்பட நடவடிக்கை எடுப்பேன். |

3.2 **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பரிந்துரை கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நொச்சியாகம இலக்கம் 01 கோழி இறைச்சி விற்பனை நிலையத்தின் வரிப்பணமாக | நிலுவை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நொச்சியாகம இலக்கம் 01 கோழி இறைச்சி விற்பனை நிலைய வரி செலுத்துபவர் |

| | | |
|---|---|---|
| சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா. 423,333 காசோலை மறுக்கப்பட்டிருந்த போதும் நிலுவைத் தொகை அறவிடப்பட முடியாமலிருந்தது. | | வழங்கிய ரூபா. 423,333 மறுக்கப்பட்ட காசோலை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளளது. இவ் வரி செலுத்துபவர் வெளிநாடு சென்றிருப்பதால் நிலுவைத் தொகை அறவிடப்பட முடியாதுள்ளது. |

### 3.3 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

### 3.3.1 **பயன்பாடற்ற / குறை பயன்பாடுடைய சொத்துக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபைக்குச் சொந்தமான மொத்தம் ரூபா. 14,346,231 பெறுமதியான 08 சொத்துக்கள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத ஒரு சொத்து ஆகியன பயன்பாடற்றுக் காணப்பட்டன. | பயன்பாடற்ற சொத்துக்களை சபையின் பயன்பாட்டிற்காக வமங்கப்பட வேண்டும். | இச் சொத்துக்கள் வேறு நிறுவனங்களிற்குப் பொறுப்பளிக்க, புதுப்பிக்க, ஏலமிட மற்றும் வேறு திட்டங்களிற்குப் பயன்படுத்த திட்டமிட்டிருக்கிறேன் |

### 3.3.2 **வருடாந்த பொருள் / இருப்பு மதிப்பீடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நொச்சியாகம பிரதேச சபை நூலகத்தில் ரூபா. 93,922 பெறுமதியான 453 புத்தகங்கள் காணாமல் போனமை கண்டறியப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் பொருள் மதிப்பீட்டின் பிரகாரம் அது தொடர்பாக எந்த ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. | காணாமல் போன புத்தகங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | காணாமல் போன புத்தகங்கள் தொடர்பாக தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3.3 **சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபை மூலம் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மூலம் காணி மற்றும் கட்டங்கள் மெய்மையாய்வு செய்யும் போது பெறுமதி 205 | தகுதியுள்ள குழுவொன்றின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு மெய்மை ஆய்வு செய்யப்பட வேண்டும். | 2018.12.31 ஆம் திகதி சபைக்குச் சொந்தமான சகல சொத்துக்கள் மதிப்பீட்டுக் குழாமொன்று நியமிக்கப்பட்டு சரியான மதிப்பீடொன்று நடாத்தப்பட்டு |

சதவீதத்தாலும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி 1082 சதவீதத்தாலும் அதிகரிப்பதுடன் வாகனப் பெறுமதி 85 சதவீதத்தால் குறைவாகவும் இருந்தது.

சொத்துக்கள் வகைப்படுத்தும் போது மெய்மையாய்வுப் பெறுமதி பயன்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் உரிய மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.